[1981 பிப்ரவரி 27

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, அது குறித்து வனத்துறையோடு கலந்து பேசி, தேவைப்படுமானால் மறு ஆய்வு செய்வது பற்றி அரசு பரிசீலிக்கும்.

ஆத்தூர் தொகுதியில் பாசனத் திட்டங்கள்.

*வினா எண். 298—திரு. ஆ. வெள்ளச்சாமி : மாண்புமிகு நீர் பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம் ஆத்தூர் தொகுதியில் எந்த எந்தப் பாசனத்திட்டங்கள் நிறைவேற்றப்படவிருக்கின்றன? என்ன என்ன திட்டங்கள் ஆய்வில் உள்ளன ?

(ஆ) ஆய்வில் உள்ள திட்டங்கள் எவ்வளவு காலத்திற்குள் நிறைவேற்றப்படும் ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ) மற்றும் (ஆ) மதுரை மாவட்டம், ஆத்தூர் தொகுதியில் ஏற்கனவே ஒப்புதல் அளித்து நிறைவேற்றப்பட வேண்டிய திட்டங்கள் ஏதுமில்லை. ரூ. 35·50 லட்சம் மதிப்பீட்டில் சின்னக் கோம்பையாறு குறுக்கே கூடல்வாவி கிராமத்தில் ஏரி அமைத்தல், ரூ. 7 லட்சம் மதிப்பீட்டில் கேசவரம்பட்டி கிராமத்தில் கதிரியங்குளம் ஏரி உபரிநீரை திருப்பி விடுதல் மற்றும் ஆலமரத்துப்பட்டி கிராமத்தில் ரூ. 50,000 மதிப்பீட்டில் குட்டை அமைத்தல் ஆகிய மூன்று திட்டங்கள் தலைமைப் பொறியாளர் மற்றும் தல அதிகாரிகளின் பரிசீலனையில் உள்ளன.

திரு. ஆ. வெள்ளச்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே, சின்னக்கோம்பையாறு குறுக்கே கூடல்வாவி கிராமத்தில் ஏரி அமைத்தல், ஆலமரத்துப்பட்டி கதிரியங்குளம் ஏரி அமைத்தல் ஆகியவை பரிசீலனையில் உள்ளன என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அதை நல்ல முறையில் பரிசீலித்து, விரைவில் அந்தத் திட்டத்தை நிறைவேற்ற அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : பேரவைத் தலைவர் அவர்களே, அரசு பரிசீலிக்கிறது என்று சொன்னாலே நல்ல முறையில் பரிசீலிக்கிறது என்றுதான் அர்த்தம். அத் திட்டத்தை, விரைவாக நிறைவேற்ற அரசு ஆவன செய்யும்.

திரு. என். வரதராஜன் : தலைவர் அவர்களே, மதுரை மாவட்டத்தின் பாசன வசதிகளைக் குறித்து ஆராய்வதற்காக மக்கள் பிரதிநிதிகளைக் கொண்ட கருத்தரங்கு ஒன்றை 6 மாதத்திற்குள் நடத்தலாம் என்று முன்பு அமைச்சர் அவர்கள்

அறிவித்தார்கள். உடனடியாக அந்தக் கருத்தரங்கை நடத்துவதன் மூலம் இப்படிப்பட்ட திட்டங்களைக் குறித்து உறுதியான நடவடிக்கை எடுக்க முடியும் என்பதால், விரைவில் கருத்தரங்கு நடத்த அரசும், அமைச்சரும் முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, ஏற்கனவே மதுரை மாவட்டத்தில் நீர்ப்பாசனக் கருத்தரங்கு தேனியில் ஒரு முறை நடைபெற்று இருக்கிறது. எனவே, எந்தெந்த மாவட்டங்களில் கருத்தரங்குகள் நடைபெற்று இருக்கின்றனவோ அவற்றில் மீண்டும் கருத்தரங்குகளை நடத்திக் கொண்டு இருக்காமல், ஏற்கனவே நடத்தப்பட்ட கருத்தரங்கில் தெரிவிக்கப்பட்ட சிபாரிசுகளின் அடிப்படையில் அரசு திட்டங்களைப் பரிசீலித்து, புதிய திட்டங்களை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. தேவைப்பட்டால், அரசு மீண்டும் பரிசீலனை செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண்கள் 299, 300 ஆகியவை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க ஒத்தி வைக்கப்படுகின்றன.

வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.— ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடம் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. தகவல் கோரல்.

### உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிக்கை.

திரு. என். வி. என். சோமு : தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகம் நடத்திய ஊர்வலத்தின் மீது போலீசார் அடக்குமுறை குறித்து ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்து இருக்கிறேன்......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : காலையில்தான் அதைக் கொடுத்து இருக்கிறார்கள். எப்போது எடுத்துக்கொள்ளப்படும் என்பது குறித்து ஆய்வு செய்து அறிவிக்கப்படும்.